Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன் 389

மலர் 13
இதழ் 293

யாழ்ப்பாணம் கார்த்திகை 18 ஷவ்வால் 15 சனிக்கிழமை (4-12-71)

எம்மிடம்
ஒஸ்ரின் A 40,
சோமசெற் கார்களுக்கு
பிஸ்ரன் & பிஸ்ரன் சிலீவ்ஸ்
விற்பனைக்கு உண்டு.
பாவனையாளர்கள் மட்டும்
உதிரிப்பாக சொல்லைவுப் புத்தகம்
காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்ரீ விக்னேஸ்வரா
8/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம்!

# காஷ்மீர் தலைநகர் மீது பாக். விமானத் தாக்கு

## புதுடில்லியில் அபாய அறிவிப்பு

புதுடில்லி, டிசம்பர் 3

இந்திய–பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலைமையை உத்தேசித்து பாரத ஜனாதிபதி இன்றிரவு நெருக்கடி நிலையைப் பிரகடனஞ் செய்தார்.

காரணம் எதுவுமின்றிப் பாகிஸ்தான் நடத்தும் ஆக்கிரமிப்பின் காரணமாக இந்திய அரசியல் சாஸனத்தின் 352வது ஷரத்தின் கீழ் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்படுவதாக ஜனாதிபதி கிரி அறிவித்துள்ளார்,

காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகர் விமானத் தளத்தின்மீது இன்று மாலையில் ஆறு பாகிஸ்தான் போர் விமானங்கள் திடீரெனக் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

பதான்கோட், அமிர்தசரஸ் ஆகிய விமானத்தளங்கள் மீதும் பாகிஸ்தான் விமானங்கள் இன்று மாலையில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின,

புது டில்லியில் இன்றிரவு முழுவதும் இருட்டடிப்பு உத்தரவிடப்பட்டுள்ளது, விமானத் தாக்குதல் எதுவும் நடைபெறுமானால் அதற்கு புதுடில்லி தயார்படுத்தப் பட்டுள்ளது

## பிரதமர் அவசரமாக தலைநகர் திரும்பினர்

வெளியூர் சென்றிருந்த பிரதமர் திருமதி காந்தி இன்று இரவே தலைநகருக்கு அவசரமாகப் புறப்பட்டு வந்தார். வெளியூர்களிலிருந்த நிதி மந்திரி சவான், பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் ஆகியவர்களும் அவசரமாக தலைநகர் திரும்பினார்கள். இந்திய ஆட்சிமன்றத்தின் இருசபைகளும் நாளைய தினம் அவசரமாகக் கூடவிருக்கின்றன.

ஸ்ரீநகர், பாதான்கோட், அமிர்தசரஸ் ஆகிய விமானத் தளங்கள் மீது பாகிஸ்தான் போர் விமானங்கள் முகாந்திர மெதுவுமின்றி இன்று மாலையில் குண்டு வீசித் தாக்கியதாக இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

ஸ்ரீநகர் விமானத் தளத்தின் மீது மாலை 5 மணிக்கு 6 பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசின. 5-45 மணிக்குப் பதான்கோட் மீது 4 விமானங்கள் குண்டு வீசின. அமிர்தசரஸ் மீது 4 விமானங்கள் 5-40க்குக் குண்டு வீசின என்று அந்த அதிகாரி கூறினார்.

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

மேற்கு அரங்கில் பாகிஸ்தான் மீது இந்திய விமானங்கள் ... பாகிஸ்தான் வானொலி குற்றஞ்சாட்டியதாகவும், இதே போன்று சில வானொலியும் ஒரு செய்தியை ஒலிபரப்பியதாகவும் கூறிய அந்த அதிகாரி இது வெறும் பொய் என்றார்.

### அப்பட்டமான தாக்குதல்

பாகிஸ்தான் இந்தியாமீது அப்பட்டமாகவே தாக்கத் தொடங்கியிருக்கிறது. பத்து நாட்களுக்குள் பெரும்போர் ஒன்று தொடங்கும் என்று ஜெனரல் யாஹ்யா கான் சமீபத்தில் கூறியதை மெய்ப்பித்து விட்டார் போலிருக்கிற என இந்திய உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

புதிதாகத் தோன்றியுள்ள நிலைமைகள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசாங்கம் ஆலோசித்துவருவதாக அந்த அதிகாரி கூறினார். இத் தாக்குதல்கள் பற்றி இப்பொழுது கல்கத்தாவிலிருக்கும் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் தெரிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில் திருமதி காந்தி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார்.

இந்தியா அமைதியையே விரும்புகின்றது. ஆனால் எமது நாட்டுக்கு அபாயம் ஏற்படுமானால் மிக வலிமையுடன் போராடுவோம் என்று அவர் அங்கு கூறினார்.

வங்காள தேசத்தின் ஏழரைக் கோடி மக்களுக்கும் இரக்கமின்றிப் பாகிஸ்தான் அரசு செய்துவரும் அட்டூழியங்களிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றவேண்டிய நிலையில் பாரதம் இருக்கின்றதென்றார் பாரதப் பிரதமர்.

கிழக்கு வங்காளத்தில் மிக முக்கியமான விமானத்தளமான சம்ஷேர் நகரை விடுதலைப்படையினர் கடந்த மூன்று நாட்களாகப் போரிட்டதன் பின் தம்வசப்படுத்திக்கொண்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன;

## ஆகர்த்தலாவில் ரொக்கட் தாக்குதல்

கிழக்கு எல்லைமாகாணமான திரிபுராவின் ஆகர்த்தலா விமானத்தளத்தின் மீது இன்று இரண்டாவது நாளாகவும் பாகிஸ்தான் சாபர் ஜெட் விமானங்கள் ரொக்கட்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நகரம் மீது மூன்று பாகிஸ்தான் விமானங்கள் குண்டுகளை வீசியதாகவும் அவைகளை இந்திய இராணுவத்தினர் துரத்தியடித்ததாகவும் அவர்கள் கூறினார்கள். நேற்றைய தினம் 4 விமானங்கள் இங்கு தாக்குதல் நிகழ்த்தினவாம்.

## பாக். விவேகத்துடன் நடக்கவேண்டும்

— ஜெகஜீவன்ராம்

பாகிஸ்தான் அரசு விவேகத்துடன் நடந்துகொள்ளுமென்று நாம் நம்புவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் கூறியிருக்கிறார். பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் போர் ஒன்று ஏற்பட்டால் இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்கள் குன்றிவிடுமென்றார்.

பாகிஸ்தான் விவேகத்துடன் நடந்து அகதிகள் திரும்பிச் செல்லும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கவேண்டும். இல்லையெனில் அவர்களைப் பத்திரமாகத் தங்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்ப பாரதம் உறுதிபூண்டிருக்கிறதென்று பாதுகாப்பு மந்திரி கூறினார், நாம் சண்டை செய்ய விரும்பவில்லை. ஆனால் எம்மை ஆயுதம் ஏந்தும்படி செய்தால் அவர்கள் மண்ணிலேயே அவர்களுடன் போர் புரிவோம் என்றார்.

தாக்குதல்களை அடுத்து இந்திய தலைநகரில் இன்று உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அபாயச் சங்குகள் முழு நகரில் எச்சரிக்கை ஒலிகளை எழுப்பின.

### பாக்.விமானத்தை கைப்பற்றினர்

பாரிஸ், டிச. 3

பாகிஸ்தான் விமானம் ஒன்றை வங்காளதேச விடுதலைப் படையைச் சேர்ந்த கெரில்லாக்கள் தடுத்து வைத்திருக்கிறார்கள். 30 பேருடன் கூடிய இந்த விமானத்தை திருப்பித் தருவதற்கு 20 தொன் மருந்துச் சாமான்களைக் கொடுக்க வேண்டுமென்றும் இன்றேல் பிரயாணிகளுடன் விமானத்தைக் கொளுத்தப்போவதாகவும் அவர்கள் பிரஞ்சு அரசுக்கு அறிவித்துள்ளார்கள்.

### கடைசிச் செய்தி

## எந்த விளைவுக்கும் நாம் தயார்

“எம் மீது பாகிஸ்தான் முழு அளவிலான போர் ஒன்றை ஆரம்பித்துவிட்டது. எந்த விளைவுக்கும் நாம் தயாராகிவிட்டோம். போரை எதிர்கொள்வோம். நாடு போருக்குத் தயாராயிருக்கிறது” என்று பாரதப் பிரதமர் திருமதி காந்தி நேற்று நள்ளிரவு 12-23 மணிக்கு விடுத்த ஒரு செய்தியில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோ-பாக். பிரச்னையில்

# ஐ. நா. பாதுகாப்புச் சபை தலையிடுவது உகந்ததல்லவாம்

## ராஜீய முயற்சிகளே பயன் அளிக்குமென அமெரிக்காகருத்து

வாஷிங்டன், டிச. 3

இந்திய பாகிஸ்தான் பிரச்னை இப்பொழுது இருக்கும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை இவ்விஷயத்தில் தலையிடுவது உகந்ததல்ல என்று அமெரிக்க அரசு கருதுகிறது என அமெரிக்க இராஜாங்க அமைச்சகப் பேச்சாளர் திரு சாள்ஸ்பிரே தெரிவித்துள்ளார்.

இந்திய பாகிஸ்தான் பிரச்னையில் ஐ. நா. பாதுகாப்புச்சபையை தலையிடக் கோருமாறு அண்மையில் அமெரிக்க செனட்டர்களில் சிலர் அமெரிக்க அரசை வற்புறுத்தி வந்தனர். இப்பொழுது பாகிஸ்தான் இந்தியப் பிரச்னை இருக்கும் நிலையில் பாதுகாப்புச் சபை அதில் தலையிடுவதினால் எவ்விதபயனும் ஏற்படாதென அமெரிக்க அரசு கருதுவதாக வாஷிங்டனிலுள்ள அமெரிக்க இராஜாங்க இலாகாவைச் சேர்ந்த பேச்சாளர் திரு. சாள்ஸ்பிரே தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் இவ்விரு நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ராஜீய முயற்சிகளே உகந்தவழியாகுமென்றும் இந்திய ராணுவம் தனது பாதுகாப்புக்காக ஒரு குறிப்பிட்ட எல்லைவரை வங்காள தேசத்திற்குள் ஊடுருவியதை ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை என அமெரிக்கா கருதாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பது விஷயமாக அமெரிக்க அதிபர் திரு நிக்சன் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் சோவியத் யூனியனுக்கும் அனுப்பி வைத்த கடிதங்களுக்கு இந் நாடுகள் இதுவரையும் எவ்வித பதிலும் அனுப்பவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய பாகிஸ்தான்

## பிரச்னையைத் தீர்க்க சோவியத் முயலும்

ஹொப்பன்ஹேகன், டிச. 3

இந்திய பாகிஸ்தான் பிரச்னையை அமைதியானதும் சமாதானத்துக்குமான வழிகளில் தீர்த்துவைக்க சோவியத் யூனியன் தன்னாலான சகல முயற்சிகளையும் எடுக்கும் என சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் கூறியுள்ளார்.

திரு கொஸிஜினுக்கு டென்மார்க் ஆட்சிமன்றம் அளித்த வரவேற்பின்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### கி. ஜெ. சோவியத் மாதர் வேண்டுகோள்

அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணையை நிறுத்திவிட்டு இந்தியா சென்றுள்ள அகதிகள் திரும்புவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்குமாறு கிழக்கு ஜெர்மனி சோவியத் மாதர்கள் சங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ உதவி நிறுத்தம்

## இந்தியா அஞ்சுமளவு பலவீனமானதல்ல

—சவான்

புதுடில்லி, டிச 3

அமெரிக்க ஆயுத உதவி நிறுத்தத்தைக் கண்டு அச்சம் கொள்ளும் அளவிற்கு இந்தியா பலவீனமான நிலையில் இல்லை என்று இந்திய நிதி அமைச்சர் திரு வை. பி. சவான் இந்திய ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்துவந்த ஆயுத உதவிகளை நிறுத்தியது பற்றி உறுப்பினர்கள் பிரச்னைகளை எழுப்பியபொழுதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் அமெரிக்கா இதுவரைகாலமும் சிறிய அளவிலேயே இந்தியாவுக்கு இராணுவ உதவி அளித்துவந்தது. ஆயுத உதவி நிறுத்தத்தினால் நாம் எவ்வகையிலும் அச்சங்கொள்ள வேண்டியதில்லை. அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்துவரும் பொருளாதார உதவியை நிறுத்தினால் கூட அதற்கு மாற்றுத்திட்டம் அரசிடம் இருக்கிறதென திரு சவான் உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார்.

## மன்னர் மான்ய ஒழிப்பு மசோதா நிறைவேறியது!

### ஆதரவு: 381 எதிர்: 6

புதுடில்லி, டிச. 3

முன்னாள் மன்னர்களின் மான்ய ஒழிப்பு மசோதா இந்திய ஆட்சிமன்றத்தில் மிகுந்த பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

இந்த மசோதாவை ஆட்சிமன்றத்தில் பிரதமர் திருமதி காந்தி பிரேரித்தார். இம் மசோதாவுக்கு ஆதரவாக 381 வாக்குகளும் எதிராக வாக்குகளும் கிடைத்தன.

இந்தமசோதாவில் இம் மன்னர்களுக்கு நஷ்டஈடு ஏதாவது கொடுக்குமா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இம்மசோதாவுக்கு இரு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு [illegible] தோல்வி அடைந்தன.

இந்தியாவிலுள்ள முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மான்யத்தை ஒழிக்கும் மசோதா முன்பு ஆட்சிமன்றத்தில் கொண்டு வரப்பட்டபொழுது அதிகப்படி ஒரு வாக்கைப்பெற்று இறுதியில் ஜனாதிபதியின் விசேஷ அதிகாரத்தைக் கொண்டு சட்டமாக்கப்பட்டது. ஆனால் இம்மசோதா சட்டமாகியது செல்லுபடியாகாதென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன்பின் பிரதமர் காந்தி ஆட்சிமன்றத்தைக் கலைத்துவிட்டு இப்பிரச்னையை மக்கள் முன்வைத்து தேர்தலில் [illegible] தக்கது.

### தவறணை முறைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

"நிதி அமைச்சரால் கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததுமூலம், நியமன எம். பி. தவறணை முறையை ஏற்றுக்கொண்டார் என்பது தெளிவாகிறது."

வட்டுக்கோட்டை அறிவொளி மன்ற செயலாளர் திரு. செ. தம்பிமுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தவறணைமுறை அவர்களின் பொருளாதாரத்தை நசுக்கி மீண்டும் அடிமைகளாக இருக்கவே வழிசெய்யும். தவறணைமுறையை எமது மன்றம் எதிர்க்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான தீர்மானம் நிதிஅமைச்சருக்கும் நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜெய்ப்பூரிலிருந்து

## பாக். 9-வது துணை டிவிஷன் மாகூராவுக்கு மாற்றம்?

புதுடில்லி, டிச. 3

கிழக்கு வங்காளத்தில் முக்திபஹினியின் நெருக்குதல்காரணமாக ஜெய்ப்பூரிலிருந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் ஒன்பதாவது துணை டிவிசன் தலைமையகம் மாகூராவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து புதுடில்லிக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்படையினர் மேலும் பல இடங்களைப் பாகிஸ்தான் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜெய்ப்பூர் மாவட்டத்திலுள்ள சில பகுதிகள் குஷ்டியா தினாஜ்பூர் மாவட்டங்களிலுள்ள ஒன்பது நகரங்கள் ஆகியவற்றை அவர்கள் கைப்பற்றியுள்ளதாகவும் பல இடங்களிலிருந்து பாகிஸ்தான் படைகள் பின்வாங்கிச் செல்வதாகவும் அவர்கள் விட்டுச் சென்ற தஸ்தாவேஜுகளிலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் மனம் முறிந்துள்ளனர் எனத் தெரியவருவதாகவும், இம் முறிவுக்கு அவர்கள் அடைந்துவரும் தோல்விகளே காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

### உயிருடன் திரும்புவதா?

"முக்தி பஹினிப்படையினரிடம் கிடைத்த தஸ்தாவேஜுகளில் கிழக்கு வங்காளத்தில் உள்ள பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்குப்பாகிஸ்தானிலுள்ள தன் சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் தான் உயிருடன் மேற்குப்பாகிஸ்தானுக்குத் திரும்பமுடியும் என்று நம்பவில்லை என்றும், வங்காள தேசத்தில் தினம் நூற்றுக்கணக்கான பாகிஸ்தான் இராணுவத்தினர் கொல்லப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள கடிதம் ஒன்றும் காணப்பட்டதாம்.

## சில்லி தலைநகரில் வன்முறைச் சம்பவங்கள்

### கூட்டங்களுக்குத் தடை

சாந்தியாக்கோ, டிச. 3

சில்லியின் தலைநகரான சாந்தியாக்கோவில் மேலும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்ற வண்ணம் இருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. சாந்தியாக்கோவில் அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தியதை எதிர்த்து மாணவர்களும் தொழிலாளர்களும் வன்முறையில் ஈடுபட்டுவருகின்றனர்.

மூன்று நாட்களுக்கு முன் [illegible] பொலிசாருக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே நடைபெற்ற கலவரத்தை அடுத்து சாந்தியாக்கோவில் அவசரகாலநிலைமை பிரகடனஞ் செய்யப்பட்டது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்புதான் மாணவர்கள், தொழிலாளர் ஆகியவர்களுடைய ஆதரவோடு ஜனாதிபதி அலெண்டே இடதுசாரி அரசாங்கத்தை அமைத்தார்.

திரு. அலெண்டே ஆட்சிக்கு வந்ததும் நாட்டின் அபிவிருத்திக்கு அவரது தீவிரம் போதாதென மாணவர்களும் தொழிலாளர்களும் அபிப்பிராயப்படத்தொடங்கினர். இந்நிலையில் சில நாட்களுக்குமுன் கியூபாத் தலைவர் டாக்டர் பெடரல் காஸ்ரோ சில்லிக்கு விஜயம் செய்து ஆயுதப்புரட்சியின் அவசியம்பற்றிப் பேசியதோடு அங்குள்ள தீவிர புரட்சியில் நாட்டங்கொண்ட இளைஞர் சங்கங்களின் உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்பே சில்லியில் மீண்டும் கிளர்ச்சிகள் நடைபெறத் தொடங்கியுள்ளது. இந்தமாணவர்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர். கூட்டங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. சில்லியிலுள்ள பத்திரிகைகள், வானொலி நிலையங்கள் அரசுக்கு விரோதமான சம்பவங்களை வெளியிடவேண்டாமென எச்சரிக்கப்பட்டுள்ளன.

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவும்

வாஷிங்டன், டிச. 3

இஸ்ரேலுக்கு தொடர்ந்து அமெரிக்கா உதவியளிக்குமென இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டாமேயரிடம் திரு. நிக்சன் உறுதி அளித்துள்ளதாக வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருமதி மேயர் அதிபர் நிக்சனை வெள்ளைமாளிகையில் சந்தித்து இரண்டுமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப்பேச்சுவார்த்தையின் பொழுது இஸ்ரேலுக்கு பான்டம் ஜெட் போர்விமானங்களை அமெரிக்கா கொடுத்துதவ வேண்டுமென நிக்சனிடம் திருமதி மேயர் வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

மேற்காசியாவில் ராணுவ சமநிலை கெடாமல் இருக்க வேண்டுமென்பதே அமெரிக்காவின் விருப்பம் என்றும், இஸ்ரேலின் பாதுகாப்புக்கு பாதகமேற்படுமானால் அமெரிக்கா இஸ்ரேலுக்கு தகுந்த உதவியளிக்குமெனவும் இஸ்ரேல் பிரதமரிடம் நிக்சன் உறுதி அளித்ததாக அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

......

ரொடீஷியப் பிரச்னை

## ஆபிரிக்கத் தலைவர்களை அழைக்க முடிவு

நியூயோர்க், டிச. 3

ரொடீஷியா சுதந்திரம் பற்றி ரொடீஷியாவுக்கும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் டக்ளஸ் ஹியூமுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை பற்றி தென்ஆபிரிக்க தேசியத்தலைவர்களை அழைத்து அபிப்பிராயம் கேட்கவேண்டுமென்று ஐ. நா. சபையில் சோவியத்யூனியன் கொண்டு வந்த தீர்மானம் வாக்கெடுப்பின்றியே ஏகமனதாக நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று அரங்கேற்றம்

மட்டுவில், சனி

இராமநாதன் இசைக் கல்லூரியைச் சேர்ந்த சங்கீத பூஷணம் திரு ஏ எஸ் இராமநாதனின் மாணவனான, செல்வன் க சேய்ந்தனின் மிருதங்க அரங்கேற்றம்



இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் இசைத்துறைப் பேராசிரியர் திரு சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சங்கீதபூஷணம் திரு ராம் குமாரசாமி ஆய்வுரை வழங்குவார். சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு வி என் நவரத்தினம், திரு மு சிவசிதம்பரம், திரு அ அமிர்தலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

செல்வன் சேய்ந்தன் மட்டுவில் மகாவித்தியாலய ஆசிரியரான திரு சி கனகசபாபதி, திருமதி வேதநாயகி தம்பதிகளின் புதல்வராவர்.

# பெண்ணை ஏமாற்றி நகைகள் அபேஸ்!

## யாழ் நகரில் நடைபெற்ற மூன்றாவது சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

"உன்னுடைய தாலிக் கொடியையும் சங்கிலி காப்புகளையும் கழற்றி வைத்து நீ அந்தப் பார்சலை எடுக்கவில்லை என்று சத்தியம் பண்ணு" என்று பெண்மணி யொருவரிடம் கூறினாராம் ஓர் இளைஞர். அந்தப்பெண்ணும் அப்படியே செய்ய பெறுமதிவாய்ந்த தாலிக் கொடியையும், காப்புகளையும் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டிவிட்டாராம் அந்த இளைஞர்.

கவலை தோய்ந்த முகத்துடன் யாழ். பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் வள்ளியம்மை நேற்று முன்தினம் செய்த புகாரிலிருந்து மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குப் பின்னாலுள்ள வீதியில் நடந்ததாக புகார்செய்யப்பட்டுள்ள இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ஒரு இளைஞர் தவறுதலாகப் போட்டுச்செல்வதைப் போல் ஒரு பார்சலைக்கீழே போட்டுவிட்டுச் சென்றாராம். பின்னால் வந்த இளைஞர் அதனை எடுத்தபோது, வள்ளியம்மை என்ற அந்தப் பெண்மணி கண்டாராம். உடனே பார்சலை எடுத்த இளைஞர் இச்சம்பவத்தைச் சொல்லவேண்டாம் என்று பெண்ணிடம் கூறினாராம். சில நிமிடத்தின் பின் பார்சலைப்போட்டவர் அவ்விடத்துக்குவந்து பார்சலைக் கண்டதாகக் கேட்டாராம். தான் எடுக்கவில்லை என்று அப்பெண்மணி கூறியபோது தாலிக்கொடி மற்றும் நகைகளைக் கழற்றிவைத்துச் சத்தியம் பண்ணும்படி கேட்டாராம். உடனே அப்பெண்மணி, அப்படிச்செய்யவே அந்தநகைகளை எடுத்துக்கொண்டு கம்பிநீட்டி விட்டாராம் அந்த இளைஞர்.

3-வது தடவையாகயாழ்ப்பாணத்தில் இப்படிச் சம்பவம் நடந்துள்ளதாகவும், இத்திருட்டுப்பேர் வழிகளிடம் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும்படியும் யாழ். பொலிசார் அறிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் 2-ம் தரம்

# வடக்கு கிழக்கில் 22 பேர் சித்தி

மாவிட்டபுரம், வெள்ளி

உள்ளூராட்சி எழுதுவினைஞர் 2-ம் தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இலங்கையடங்கலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் உள்ளூராட்சி அதிகாரசபையால் இவ்வருடம் ஜூன் மாதம் நடாத்தப்பட்ட 2-ம் பிரிவுப் பரீட்சையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 22 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு:

யாழ். மாநகரசபை- எஸ். கணேசன், ரி நாகேஸ்வரன், எஸ்.ரி. கதிரவேலுப்பிள்ளை, எஸ். எம். பொன்னம்பலம், கே. இராசசுந்தரம், அ. இராமநாதன், ச. செல்வந்திரநாதன், வி. செல்வநாயகம், எஸ் பத்மநாதன்

மட்டக்களப்பு மாநகர சபை- என். யோகேஸ்வரன், பி. கணபதிப்பிள்ளை, எஸ். வி. வி. சர்மா

எஸ். பரமலிங்கம் (திருமலை நகரசபை) எஸ். கந்தவேல் (உடுப்பிட்டி ப. ச) ஜி. ஆர். இராசலிங்கம் (நெல்லியடி ப. ச.) என். ஞானவேல் (சுன்னாகம் ப.ச) கே. செல்வராசா (ஊர்காவற்றுறை ப. ச.) எஸ். கந்தையா (வல்வெட்டித்துறை ப. ச.) வீ. யோகரத்தினம் (மயிலிட்டிக் கிராமசபை) கே. சிவநாதசுந்தரம் (நெடுஞ்செட்டிகுளம் [illegible]) மற்றும் எம். [illegible] காம் பி. ஸி, ரொட்ரிகோ

## ஆறுமாதகால நீடிப்பு

கொழும்பு, வெள்ளி

இம்மாத இறுதியில் 55 வயதைந்து வயது சேவையைப் பூர்த்திசெய்து ஒய்வு பெற இருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் ஆறுமாத காலம் சேவை செய்ய அரசாங்கம் அனுமதி வழங்க இருக்கிறது.

பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி விவகார அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் ஆறுமாத காலம் நீடிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதன்பேரில் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

## 'பாலத்தை உடன் திருத்துக'

குருநகர், வெள்ளி

யாழ்ப்பாணம்— மண்டைதீவு வீதியிலுள்ள பிரதான பாலம் ஒன்றில வெடிப்பு ஏற்பட்டு இடிந்துள்ளதால் நேற்று முதல் மண்டைதீவு பஸ்சேவை தடைபட்டுள்ளது

இதனால் பஸ்பிரயாணிகள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர் இப்பாலத்தை உடன் திருத்தி பஸ்சேவை நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கச் செயலாளர் ஊர்காவற்றுறை வெளிவீதிகள் பகுதி பொறியியலாளரை தந்திமூலம் கேட்டுள்ளார்

## உயர் பட்டப்படிப்பு

கோட்டை, வெள்ளி

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் உயர் பட்டப்படிப்பை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இக்கல்லூரியில் உயர்பட்டப்படிப்புக்கான வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஐ. நா அபிவிருத்தி நிறுவனத்திடம் உதவி கோரவுள்ளது. இந்தப் பட்டப்படிப்புக்கான விஸ்தரிப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. யுனெஸ்கோ ஸ்தாபனம் 80 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை இக்கல்லூரிக்கு வழங்கியுள்ளது

## வடமராட்சிக்கும் விஜயம் செய்வார்

உடுப்பிட்டி, வெள்ளி

உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எதிர்வரும் 10-ம் திகதி வடமராட்சிக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அன்றைய தினம் அமைச்சர் பீலிக்ஸ் துன்னாலை சைவப் பிரகாச வித்தியாசாலை விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிட நிதிக்காக நடைபெறும் முத்தமிழ்க் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## அறிவித்தல்

### மல்லாகம் இந்துக் கல்லூரி

ஷெ கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்பகூட்டம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்களின் நல்வரவை நாடுகின்றோம். பழைய மாணவர்கள் தங்கள் விலாசங்களை தயவு கூர்ந்து எனக்கு அனுப்பிவைக்கவும்.

ஆ. சிவசுப்பிரமணியம் அதிபர்.

# 'தீவுப்பகுதி குட்டிக் கச்சேரிகள்'

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கத்தின் உத்தேச குட்டிக்கச்சேரிகள் திட்டத்தை வரவேற்று வேலணை கிராமசபைத் தலைவர் திரு க சதாசிவம் ஓர் அறிக்கையை விடுத்துள்ளார். குட்டிக் கச்சேரிகள் அமைவதன்மூலம் பொதுமக்களின் பல சிரமங்கள் தவிர்க்கப்படுமென்றும் மக்களது அலுவல்களைத் தமது பகுதிக் கச்சேரிகளிலேயே நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும் இத்திட்டத்தை கிராமசபை சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். தீவுப்பகுதியில் அமையவிருக்கும் குட்டிக் கச்சேரிகள் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:-

ஊர்காவற்றுறைப் பிரிவில் இப்போது ஒரு காரியாதிகாரி சந்தோர் மாத்திரம் இயங்கிவருகின்றது. அடுத்த ஆண்டு இரண்டு பிரிவுகளாக இது விஸ்தரிக்கப்பட்டு மண்டைதீவு அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு முதலியவற்றுக்கு ஒரு காரியாதிகாரி அலுவலகம் மத்தியஸ்தானமான வேலணை வங்களாவடியில் நிறுவுவதற்கு பொதுமக்களின் வேண்டுகோளின்படி யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் சிபார்சுடன் அரசாங்கம் வேலணையில் நிறுவ ஒழுங்கு செய்திருக்கின்றது.

அதற்கடுத்தாண்டு காரியாதிகாரி அலுவலகம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு புங்குடுதீவு, நயினாதீவுக் கிராமசபைகளுக்குப் பொதுவாக புங்குடுதீவில் நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றதாக உத்தியோகபூர்வமாக அறியக்கிடக்கின்றது. இப்பொழுது ஊர்காவற்றுறையிலிருக்கும் காரியாதிகாரி அலுவலகம் நாரந்தனைக் கிராமசபை, ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர் கிராமசபைகளுக்கு ஒரு மத்திய குட்டிக் கச்சேரியாக விளங்கும். அதன்பின்னர் காரைநகரின் இரு கிராமசபைகளுக்கும் தனியொரு காரியாதிகாரி அலுவலகம் நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

தவறணை முறை

# 'தொழிலாளி வாழ்வை உயர்விக்கும்'

யாழ்ப்பாணம், சனி

"மரவரியிலும் பார்க்கத் தவறணை முறை கள் இறக்கும் தொழிலாளருக்குப் பொருளாதார வளத்தை ஏற்படுத்தும். அத்தொழிலில் மேலும் அபிவிருத்தியடைவதாக இருக்கும். குட்டி முதலாளிகளின் கைவரிசை மேலோங்காது"

இவ்வாறு தெல்லிப்பழையில் நடைபெற்ற அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் கூட்டத்தில் திரு. எஸ். பங்கிராஸ் கூறினார்

திரு. வி. ஞானரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பங்கிராஸ் தொடர்ந்து பேசுகையில், கலாநிதி என் எம். பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இந்நாட்டு மக்களுக்குச் சிறந்த வாழ்வை அளிக்கும். தொழிலாளர்கள் சுபீட்சத்துடன் வாழக் கூடிய புதியதோர் சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் என்றார்.

4 கட்சி பிரமுகர்களும்

# மரவரி ஒழிப்பு பற்றி இன்று ஆலோசிப்பர்

யாழ்ப்பாணம், சனி

மரவரி முறையை ஒழிக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது சம்பந்தமாக ஆராயுமுகமாக வடபகுதி கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம், யாழ் மாநகர சபை பொது நூல்நிலைய மண்டப அறையில் ஆலோசனைக் கூட்டமொன்றை இன்று நடாத்தவிருக்கிறது. நியமன எம் பி யும், கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசியுமான திரு எம் சி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகளும், பிரமுகர்களும் பங்குபற்றவிருக்கின்றனர்.

மரவரிமுறை ஒழிக்கப்படுவதின் காரணமாக எழக்கூடிய நிலைமைகள் பற்றியும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

## கடலில் சென்ற மூவர் எங்கே?

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து பொழுதுபோக்குக்காக மீனவர் ஒருவரது கட்டுமரத்தை எடுத்துக்கொண்டு கடற்பிரயாணம் புறப்பட்ட மூவர் இன்னும் கரைதிரும்பவில்லை மூன்று தினங்களுக்கு மேலாகியும் இவர்கள் பற்றிய செய்தி எதுவும் எட்டவில்லை மதுபோதையில் இவர்கள் இருந்ததாகவும் தம்முடன் மதுபானத்தையும் எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது இவர்கள் இறந்துவிட்டதாகக் கருதி, இவர்களது உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறியழும் காட்சி நெஞ்சை உருக்குகிறது.

51 சாக்குமூடை மிளகாயை

## ராணுவம் கைப்பற்றியது

சிலாபம், வெள்ளி

கடத்தல் பொருள் எனக் கருதப்பட்ட 61 சாக்கு மூடை மிளகாய் கொண்ட ஒரு லொறியை காவலில் ஈடுபட்டிருந்த தரைப்படையினர் கடந்த இரவு கைப்பற்றினர்.

மாதம்பிட்டியில் வைத்து கைப்பற்றப்பட்ட லொறியும் மிளகாயும் சிலாபம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நல்ல குடும்பத்தைப் போன்ற பள்ளி வேறில்லை; ஒழுக்கம் மிக்க பெற்றோர்களைப்போன்ற சிறந்த ஆசிரியர்களும் இல்லை. —காந்தியடிகள்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box; 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருடம் கார்த்திகைமாதம் 18-ந் திகதி (4-12-71)

# கிராம முன்னேற்றம்

'கச்சேரியில் பூட்டி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பணம் இனி நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்' என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, யாழ்ப்பாணக் கச்சேரியில் இலங்கை வங்கிக் கிளைத் திறப்புவிழாவில் தெரிவித்திருக்கிறார். மாகாண நிர்வாகம் சீர்படுத்தப்படும் பொருட்டு உள்நாட்டு அமைச்சரும் அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துவருவதும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் செயல்படத் தொடங்கியிருப்பதும் எதிர்காலம் பற்றி சற்றே நம்பிக்கையளிப்பதாகும்.

கச்சேரிகளில் கிளப்பர் முறை ஒழிக்கப்படுவது வரவேற்கத்தக்கது. கச்சேரி முறையும் ஒழிக்கப்பட வேண்டுமென்பதைப் பொதுவாகப் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர். கச்சேரி முறையும் விரைவில் ஒழிக்கப்படுமென எதிர்பார்ப்போம்.

கிராமங்களில்தான் ஒரு நாட்டின் பொருளாதாரம் தங்கியிருக்கிறது. காந்தி காண விரும்பிய கிராம ராஜ்யமும் மாசேதுங் காணும் நவசீன முன்னேற்றமும் கிராமங்களில் தான் தங்கியிருக்கின்றன.

நமது நாடு விடுதலையடைந்து கால் நூற்றாண்டுகளாகியும் கிராமங்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தப்படாததால் இன்று நாட்டின் பொருளாதாரமே அவல நிலையை அடைய நேரிட்டது!

அதிகாரத்தைப் பரவலாக்கவும் அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்தியில் மக்களே நேரடியாகப் பங்குகொள்ளவும் மக்களின் உழைப்பும் பணமும் மக்களினதும் நாட்டினதும் நலனுக்குப் பயன்படவும் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை மக்கள் நிச்சயம் வரவேற்பர்.

இத்திட்டங்களை மக்களுக்குச் சரியானமுறையில் விளக்கிக் கூறுவதுடன் திட்டங்கள் சரியாகச் செயல்படவும் லஞ்சம் ஊழல், மோசடி ஆகிய தேசத்துரோகச் செயல்கள் ஒழித்துக்கட்டப்படவேண்டியதும் மிக மிக முக்கியமாகும்.

# வெள்ளையன் மறைவு

திரு. வி. கே. வெள்ளையன் காலமானாரென்ற செய்தி மலையகத்தில் மட்டுமல்ல நாடு முழுவதற்குமே அதிர்ச்சி தரும் துயரச் செய்தியாகும்.

மலையகத்தில் ஒரு தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்து தோட்டத் தொழிலாளரின் கஷ்ட நஷ்டங்களை நன்கு உணர்ந்து அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படச் செய்வதற்காக தமது வாழ்க்கையையே அர்ப்பணித்தவர் திரு. வெள்ளையன்.

திரு. தொண்டமானின் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அவன் உபதலைவராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றிய திரு. வெள்ளையன் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறி தேசியத் தொழிலாளர் சங்கத்தை அமைத்து தோட்டத் தொழிலாளருக்காகச் சேவை புரிந்து வந்தார்.

தோட்டத் தொழிலாளரின் நல்வாழ்வுக்காகத் தனது வாழ்க்கையையே அர்ப்பணித்த திரு. வெள்ளையனின் ஆத்மா சாந்தி அடைவதற்கு அத்தொழிலாளரின் நல்வாழ்விலும் அவர்களின் நல்வாழ்வுக்காக இயங்கும் தொழிற் சங்கங்களின் செயலிலும் தான் தங்கியிருக்கிறது. திரு. வெள்ளையனின் திடீர் மறைவினால் கண்ணீர்விடும் பல்லாயிரக் கணக்கான தோட்டத் தொழிலாளருடன் சேர்ந்து நாமும் நமது அஞ்சலியை மறைந்த தொழிலாளர் தலைவருக்குச் செலுத்துகிறோம்.

# தொழுநோயாளர்

தொழுநோயாளர் கொடித்தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. தொழுநோயாளர் நிலையை மேம்படச் செய்வதற்கும் தொழுநோயை தடைசெய்வதற்குமாக நிதி திரட்டும் பொருட்டு இக்கொடித்தினம் நடைபெறுகிறது. இதற்கு ஆதரவளித்து உதவவேண்டியது மனிதாபிமானமுள்ள மக்களின் புனிதப் பணியாகும்.

இலங்கையில் இப்போது சுமார் பதினாயிரம் பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்துப் பராமரிக்கும் வைத்திய நிலையங்கள் இரண்டே இரண்டுதான் நமது நாட்டிலிருக்கின்றன. ஒன்று ஹெந்தலையிலும் மற்றது மட்டக்களப்புப் பகுதியிலுள்ள மாந்தீவிலும் அமைந்திருக்கின்றன.

தொழுநோயை குணப்படுத்த முடியுமென்ற நம்பிக்கை புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் இன்று ஏற்பட்டுள்ளது. தொழுநோயாளர்களிடமும் மக்கள் அனுதாபம் கொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்குச் சேவை செய்வதைப் பெரும் புண்ணியமாகக் கருத வேண்டுமென்றும் காந்தி மகாத்மா கூறியதுடன் நின்றுவிடாது தொழுநோயாளரிடம் சென்று அவர்களுக்குத் தாமே சேவை செய்தும் வழிகாட்டினார்.

நோயாளிகளுக்குச் சேவை செய்வதையே தமது இலட்சியமாகக் கொண்ட கன்னியாஸ்திரி தாதிமார் இங்கு இருந்த காலத்தில் தொழுநோயாளர் சிறந்த முறையில் கவனிக்கப்பட்டனர். இப்போது அவர்கள் சரியாகக் கவனிக்கப்படவில்லையென்பது பொதுவான குறையாகும். சமீபத்தில் மாந்தீவு தொழுநோய் ஆஸ்பத்திரிபற்றி உதவிச் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஓபயசேகரா வெளியிட்டிருந்த கருத்து இதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. நமது தாதிமார்களும் ஆஸ்பத்திரிப் பணியாளர்களும் டாக்டர்களும் தொழுநோயாளரும் மனிதர்தான் என்பதை உணர்ந்து அவர்களுக்குச் சேவை செய்வதைப் பெரும் புண்ணியமாகக் கருதித் தமது கடமையைச் செய்தால் [illegible] நிச்சயமாகச் செய்யலாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

## சிவராத்திரி எந்தத் திகதி?

இவ்வருடம் மாசிசிவராத்திரி விரதம்பற்றி இரு வாக்கிய பஞ்சாங்கங்கள் இருவிதமாகக் குறிப்பிடுகின்றன. மாசிமாதம் 30-ம் திகதி என ஒன்றும் அடுத்த மாதம் 1-ம் திகதியென மற்றதும் கூறுகின்றன. இதில் எது சரி? 30-ம் திகதியே கொள்ள வேண்டுமென பின்வரும் ஆகம சுலோகம் கூறுகிறது:

**உத்தமசிவராத்திரி**

விரசகமம்:- உதயாஸ்தமநேசைவதீர போதஸ்யாம். தஜைசைவ, சாத்ரௌ சதுர்த்தி சியுக்த முத்தமந்து விதியதே.

உதயாஸ்தமன காலத்தில் திரயோதசி இருந்து இராத்திரி நிசியில் சதுர்த்தசி சம்பவிக்குமாயின் உத்தம சிவராத்திரியாகும் என்பது இதன் பொருள்.

காலநிர்ணயம்:- அர்த்த ராத்ரௌ சங்கிரம தோஷ நவாயருந்.

அர்த்த ராத்திரிக்குமேல் (45 கஷ) சங்கரமம் வந்தால் தோஷமில்லை.

**மத்திமசிவராத்திரி**

விரசகமம்:- உதயாத்யுதயாந்தம் சஹஸ்ர ஹோராத்ரம் சதுர்த்தசி மத்தியமம் சேதிவிக்யாதம் பூஜையேத் பரமேஸ்வரம்.

உதயம் முதல் மறுநாள் உதயபரியந்தம் சதுர்த்தசி இருப்பின் இதுமத்திம சிவராத்திரியாகும்.

வசந்தராத்ருணவியிகை:- சிம்ஹேரவி சம்பிராப்தே. ரோகிணி ஹிதாஷ்டமி. தகாதி கணவலம் இருந்துவா. சாசித சதுருத்தரா! சதாபேந்தி ருத்தேது. சிவராத நித்தில்விருது:

இதன் பொருள்: ஸ்ரீகிருஷ்ண ஜயந்திமுதல் 182நாட்கள் முதல் 185 தினங்களுக்கிடையில் மாசிசிவராத்திரி வரும்.

மேற்காட்டிய பிரமாணங்கள் எல்லாம் 1987-ம் ஆண்டு (தமிழ் தாதுவருடம் மாசி மாதம் 27-ம் திகதி சோதிடப் பரிபாலினி பத்திரிகையில் இருக்கிறது) சோதிட வித்வன்னர்கள், கோயில தாரிகள், குருக்கள்மார் இதற்குத் தகுந்தவிடை கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

— சந்தேகி.

# 'அவர் ஓர் உயர்ந்த சமத்துவவாதி'

யாழ்ப்பாணம், சனி

"சேவை மனப்பான்மை படைத்தவனுக்கு ஆசிரியத் தொழிலைப் போல் வாய்ப்பான தொழில் வேறில்லை. ஆசிரியத் தொழில் தொண்டாற்றும் ஒரு புனிதத் தொழில்"

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுமார் கால்நூற்றாண்டுக்கு மேல் ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் பணியாற்றி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. மு. கார்த்திகேசன் யாழ். இந்து ஆசிரியர்களால் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை இராப்போசன விருந்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் சொன்னார்.

தாம் ஆசிரியப் பணியாற்றிய சுமார் கால்நூற்றாண்டு காலத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் தாம் அநேக பண்புகளைக் கற்றுக் கொண்டதாகவும் முக்கியமாகச் சமத்துவப் பண்பைக் குறிப்பிடலாமென்றும் கூறிய திரு. கார்த்திகேசன் இதற்குச் சில உதாரணங்களை எடுத்துக் கூறினார். இக்கல்லூரியில் தாம் கடமையாற்றிய காலத்தில் தமக்கு அன்பும் ஆதரவும் அளித்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு அவர் தமது நன்றியைத் தெரிவித்தார்.

யாழ். இந்து ஒரு தேசிய ஸ்தாபனமென்றும் சைவ சமயத்தைப் போன்று இதுவும் முதலும் முடிவுமற்றதென்றும் அவர் சொன்னார்.

அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் பேசுகையில் திரு. கார்த்திகேசன் தம்முடன் பல்கலைக் கழகத்தில் பயின்றதாகவும், அப்பொழுதே தாம் அவருடைய பொது சேவை மனப்பான்மையை அறிந்திருந்ததாகவும் தெரிவித்தார்.

முன்னாள் அதிபர் திரு. என். சபாரத்தினம் பேசுகையில், ஒரு கல்லூரியின் வளர்ச்சி அக்கல்லூரி ஆசிரியர்கள் அதிபருக்கு அளிக்கும் ஒத்துழைப்பில் தான் தங்கியிருக்கிறதென்றும், தாம் அதிபராயிருந்த காலத்தில் திரு. கார்த்திகேசன் ஆசிரியராயிருந்து, ஆசிரியர்கள் - அதிபர் உறவை வளர்த்ததாகவும் குறிப்பிட்டார். அவர் ஓர் உயர்ந்த சமத்துவவாதி எனவும் வர்ணித்தார்.

ஆசிரிய குழுத்தலைவரான திரு. சி. சிவராஜா மீண்டும் திரு. கார்த்திகேசன் யாழ். இந்து அதிபராக வரவேண்டுமெனத் தாம் ஆசைப்படுவதாகச் சொன்னார்.

மற்றும் ஆசிரியர்களில் திருவாளர்கள் இ. மகாதேவா, கே. சொக்கலிங்கம், வி. ஏரம்பமூர்த்தி, ரி. சேனாதிராஜா, என். நல்லையா, வி. சிவசுப்பிரமணியம், கே. எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் திரு. கார்த்திகேசனின் குணபண்புகளை பாராட்டிப் பேசினார்கள்.

# வர்க்கபேதத்தை ஒழிப்பதே கல்வித்திட்டத்தின் நோக்கம்

கண்டி, வெள்ளி

"வர்க்க பேதத்தை ஒழிக்கும்முகமாகவும் கிராமம் நகரம் ஆகிய இரு இடங்களிலும் சமமான கல்விமுறையைக் கொண்டு வருவதற்காகவுமே புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கண்டி சென்ற் செபஸ்டியன் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. பிரேமதாஸ உடகம மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: வேலைவாய்ப்பை ஆதாரமாகக் கொண்ட இக் கல்விச் சீர்திருத்தத்தால் கல்வி வசதிகள் நசுக்கப்படமாட்டாது. கிராமத்துக்கும் நகரத்துக்கும் கல்வித்துறையில் சமவாய்ப்பு அளிப்பதே இப்புதிய கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கு அடுத்ததாக கல்விகற்கும் யாவருக்கும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதும் இப்புதிய திட்டத்தின் நோக்கமாகும். ......

உரும்பராய், வெள்ளி

7-ம் வகுப்புக்குரிய ஜாதிய நவோதய புலமைப் பரீட்சையில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிற் சென்ற ஆண்டு 7-ம் வகுப்பிற் கல்விகற்ற செல்வி நா. வத்சலாதேவி சித்திபெற்றுள்ளார்.

## மரண அறிவித்தல்

— சுன்னாகம் இ. இராமநாதன் —

சுன்னாகம் தோப்புவழவு பொன்னம்பலம் இளையதம்பியின் மகனும், மீனாட்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் இளையதம்பி (அரசினர் மரகூட்டுத்தாபனம்யாழ்ப்பாணம்) திருநாவுக்கரசு (பொது வேலைப் பகுதி ஓவசியர் மாகோ) சிவானந்தன் (பனங்கட்டி சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) திருமதிகள் சிவபூரணம் அன்னபூரணம் ஆனந்ததேவி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருவாளர்கள் த. சிவஞானசுந்தரம், வை. ப. நாகமம் (கோலாலம்பூர்) யா. நடராசா (சிலாங்கூர்) திருமதி மங்கவேல்லை (ஆசிரியை மகாவித்தியாலயம் மாகோ) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற திருவாளர்கள் பொன்னம்பலம் (மலாயா பென்சனர்) தாமோதரம்பிள்ளை (காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), திரு. கனகரத்தினம் (காரியாலய பரிசோதகர் கூட்டுறவு மட்டக்களப்பு) காலஞ்சென்ற திருமதி அன்னபூரணம் வைத்திலிங்கத்தின் அருமைச் சகோதரரும் ஆகிய இளையதம்பி இராமநாதன் (இளைப்பாறிய சந்தை மேற்பார்வையாளர்) சிவபதமெய்தினார். ஈமைக்கிரியைகள் இன்று 4-12-71 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 8198

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org